# ஊடகத்தகவல்கள்

## புத்தாண்டு, புதிய மொழிகள்

புது வருடத்தில் இரண்டு புதிய மொழிகளைக் கொண்ட ஒலிபரப்பு Radio Xல் ஆரம்பம்:

Tamil Radio X: தை மாதம் 7ம் திகதி தொடக்கம் பிரதி திங்கள் தோறும் மாலை 7 மணி முதல் 8 மணிவரை

Tamil Radio X மூலமாக ஓர் புதிய தமிழ்க்காற்று பாசல் வானலலைகளில் வீசவருகின்றது. பல இளைஞர்கள், யுவதிகளை உள்ளடக்கிய ஓர் தமிழ்க்குழு, பல தகவல்களைத் தமிழிலும், டொச் மொழியிலும் நேயர்களுக்காக அள்ளித்தர வருவதோடு மட்டுமன்றி சுவிஸ் வாழ் அனைத்து மக்களுக்கும் தமிழர்களுக்குமிடையே ஓர் உறவுப்பாலமாக செயற்படவிருக்கின்றது. டொச் மொழி பேசும் மக்கள் தமிழ் கலாச்சாரத்தைப் பற்றி அறியவும், தமிழ் பேசும் மக்கள் சுவிஸ் நாட்டுத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளவும் ஓர் சிறந்த ஊடகமாக அமையவிருக்கின்றது. அத்தோடு இலங்கை, இந்தியாவிலிருந்து வெளிவந்த பழைய, புதிய பாடல்கள், அறிவியல் தகவல்கள், மருத்துவக்குறிப்புகள், சுவிஸ் செய்திகள், நகைச்சுவை நேரங்கள் மற்றும் பல உளம்கவர் நிகழ்வுகளும் உங்களுக்காகக் காத்திருக்கிறது.

தொடர்புகளுக்கு:
Tamil Radio X , சீலன் : 076 302 88 15
மின்னஞ்சல் : tamil@radiox .ch